

**ஆனந்த் பார்த்தசாரதி,**
மேலாண் பங்குதாரர்,
www.arammfinserv.com

# ஓய்வுக்காலத்துக்கு சுலபமாகப் பணம் சேர்க்க சூப்பர் வழி... 'பி.ஜி.ஐ.எம்' சர்வேயும் சக்சஸ் ஃபார்முலாவும்!

**பணி ஓய்வுக்காலத்துக்குத் தயாராக இருப்பது பற்றிய சர்வே ஒன்றை பி.ஜி.ஐ.எம் மியூச்சுவல் ஃபண்ட் நிறுவனம், இந்தியா முழுக்க 3,000 நபர்களிடம் எடுத்திருந்தது. அதில், ஒருவரின் ஓய்வுக்காலத்தில் உள்ள நிதி தொடர்பான ஆசைகள் மற்றும் அதை அடைய வேண்டிய உத்திகள் பற்றி பல்வேறு கேள்விகள் கேட்கப்பட்டன. முக்கியமாக, ஒருவரின் நிதி இலக்குகளுக்காக எந்த வழிகளில் செல்வத்தைச் சேர்த்தால் ஓய்வுக் கால இலக்குகளைச் சுலபமாக அடைய முடியும் என்பது பற்றிய கேள்வி இடம்பெற்று இருந்தது.**


அந்தக் கேள்விக்கு பெரும்பாலானோர் சொன்ன சில பதில்கள் மற்றும் விருப்பங்கள் குறித்துப் பார்ப்போம்.

**பங்குச் சந்தை சார்ந்த ஈக்விட்டி ஃபண்டுகளில் முதலீடு செய்வது மூலம் நீண்ட காலத்தில் ஆண்டுக்குச் சராசரியாக 12% - 13% வருமானத்தை எதிர்பார்க்கலாம்..!**

### 1. அதிக வருமானம் தரும் முதலீடு...

சர்வேயில் கலந்துகொண்ட 50% நபர்கள் கூடுதல் வருமானம் அளிக்கும் திட்டங்களில் முதலீடு செய்வதன் மூலம் செல்வத்தைச் சேர்க்க முடியும் என்று நம்புகின்றனர். அவர்களின் முதலீட்டு விருப்பமும் அதிக வருமானம் அளிக்கும் நிதி திட்டங்களில்தான் இருக்கிறது. அதற்காக, ரிஸ்க் அதிகம் உள்ள திட்டங்களில் முதலீடு செய்வதற்கும் இவர்கள் தயாராக இருக்கிறார்கள். இவர்களில் பெரும்பாலானோர் அதிக ரிஸ்க் உடைய டெரிவேட்டிவ் சந்தைகளில் முதலீடு செய்வதற்கும் தயாராக இருக்கிறார்கள்.

(செபி அமைப்பு வழங்கியிருக்கும் தரவுகளின் அடிப்படையில் 91% சதவிகித நபர்கள் இதில் மூலதன இழப்புகளைச் சந்திக்கின்றனர் என்பதை அறிய முடிகிறது. விரைவாக பணத்தைச் சேர்க்க வேண்டும் என்ற இவர்களது ஆசை, பணத்தை இழக்கக்கூடிய அபாயத்துக்கும் வழிவகுக்கும் என்பதைக் கவனத்தில்கொள்வது நல்லது. நேரடிப் பங்கு முதலீட்டுடன் ஒப்பிடும்போது, அதிக ரிஸ்க் இல்லாத பல்வேறு துறை சார்ந்த பங்குகளில் கலந்து முதலீடு செய்யும் பங்குச் சந்தை சார்ந்த ஈக்விட்டி ஃபண்டுகளில்



முதலீடு செய்வது மூலம் நீண்ட காலத்தில் ஆண்டுக்குச் சராசரியாக 12% - 13% வருமானத்தை எதிர்பார்க்கலாம்).

**2. பணியில் உயர்ந்த பதவியை அடைவது...**

சர்வேயில் கலந்துகொண்ட 36 சதவிகித நபர்கள் தங்களது அலுவலகத்தில் உயர்ந்த பதவியை அடைவதன் மூலம் கூடுதல் செல்வத்தைச் சேர்க்க முடியும் என்று நம்புகின்றனர். உயர்ந்த பதவி காரணமாகக் கிடைக்கும் கூடுதல் ஊதியம் நிலையான வருமானத்தை அளிப்பதுடன் செல்வ செழிப்பையும் ஒருவருக்குப் பெற்றுத்தரும்.

கடினமாக அலுவலகத்தில் உழைப்பதன் மூலம் இந்த இலக்கை அடைய முடியும் என்று இவர்கள் நம்புகின்றனர். அதற்காக, திறன் சார்ந்த மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இவர்கள் தயாராக இருக்கிறார்கள்.

**3. பொழுதுபோக்குகளைப் பணமாக்குவது...**

சர்வேயில் கலந்துகொண்ட 22% நபர்கள் தங்களின் பொழுதுபோக்குகளை பணமாக்குவதன் மூலம் கூடுதல் செல்வத்தைச் சேர்க்க முடியும் என்று நம்புகின்றனர். ஒருவரின் ஆசை மற்றும் விருப்பத்தின் பெயரில் செயலை செய்யும்போது கூடுதல் ஈடுபாடு காரணமாக, எடுத்துக்கொண்ட செயலை சிறப்பாக முடிக்க முடியும். இதன் மூலம் அவர்களுக்கு கூடுதல் ஊதியம் கிடைக்கும் என்று நம்புகின்றனர்.

உதாரணமாக, கதை, கட்டுரை எழுதுதல், பிளாக் எழுதுதல், யூடியூப் சேனல் நடத்துவது, இசைக் குழு அமைத்து இசை நிகழ்ச்சி

நடத்துவது போன்றவற்றின் மூலம் கூடுதலாகச் சம்பாதித்து செல்வம் சேர்க்க முடியும் என இவர்கள் நினைக்கிறார்கள்.

**4. வரி அனுகூலம் மூலம் செல்வம் சேர்ப்பது...**

சர்வேயில் கலந்துகொண்ட 30% நபர்கள் வருமான வரித் தள்ளுபடி விவரங்களைத் தெரிந்துகொண்டு, அதனடிப்படையில் வரி கட்டுவதால் கிடைக்கும் வரிசலுகைகள் மூலம் கணிசமான பணத்தைச் சேர்க்க முடியும் என்று நம்புகின்றனர். வருமான வரி அனுகூலங்கள் (Tax Efficiency) வழங்கும் திட்டங்களில் பார்த்து முதலீடு செய்தால் செல்வத்தைச் சேர்க்க முடியும் என்பது இவர்களின் நம்பிக்கை.

இந்தியாவைப் பொறுத்தவரையில் தற்போதைய நிலையில் பணியாளர் பிராவிடென்ட் ஃபண்ட் (EPF), பொது மக்களுக்கான பிராவிடென்ட் ஃபண்ட் (PPF) ஆகிய முதலீடுகளுக்கு வட்டி வருமானத்துக்கு வரி இல்லை. ஆனால், இ.பி.எஃப்-க்கு 8.25%, பி.பி.எஃப்-க்கு 7.1% என்பது குறைவான வருமானம் ஆகும்.

அந்த வகையில் இவற்றில் வரி அனுகூலம் இருந்தாலும் அதிக லாபம் இல்லை. நிறுவனப் பங்குகள் மற்றும் ஈக்விட்டி மியூச்சுவல் ஃபண்டுகளில் ஓராண்டுக்கு மேற்பட்ட நிலையில் பங்குகள், யூனிட்டுகளை விற்று நீண்ட கால மூலதன ஆதாயம் அடையும் போது நிதியாண்டில் ரூ.1.25 லட்சம் வரைக்கும் வருமான வரி இல்லை. அதற்கு மேற்பட்ட லாபத்துக்கு ஒருவர் எந்த நிதி வரம்பில் வந்தாலும் 12.5% வரி கட்டினால் போதும்.

அந்த வகையில், வரி கட்டத் தேவையில்லாத அல்லது குறைவான வருமான வரி கட்டும் பங்குச் சந்தை சார்ந்த திட்டங்களில் முதலீடு செய்து 30 சதவிகிதம் பேர் நிதி இலக்குகளை நிறைவேற்றவும் செல்வம் சேர்க்கவும் திட்டமிடுகிறார்கள் என அந்த சர்வே மூலம் தெரிய வந்துள்ளது.

**5. சரியான நிதி திட்டமிடல்...**

சர்வேயில் கலந்துகொண்டவர்களில் 24% நம்பர்கள் சரியான நிதி திட்டமிடலை (Financial Plan) பின்பற்றுவதன் மூலம் செல்வத்தைச் சேர்க்க முடியும் என்று நம்புகின்றனர்.

தனித்தனி நிதி இலக்குகளுக்கு, பணத்தைத் தனியாகப் பிரித்து சரியாக முதலீடு செய்வதன் மூலம் கூடுதல் செல்வத்தை அடைவதே இவர்களின் இலக்காக உள்ளது.

இந்த சர்வேயின் மூலம் பெரும் பாலான நபர்கள் அதிக ரிஸ்க் எடுத்து முதலீடு செய்வதற்குத் தயாராக இருக் கிறார்கள் என்பதை அறிய முடிகிறது. என்றாலும், முறையான நிதித் திட்டமிடல் மூலமே கூடுதல் செல்வத்தைச் சேர்த்து நிம்மதியான ஓய்வுக் காலத்தை உறுதி செய்ய முடியும்.

பணச் சிக்கல் இல்லாத ஓய்வுக்காலத்துக்கு முதலீட்டை சீக்கிரமாக ஆரம்பிப்பது மிக அவசியம். வேலையில்லாத ரிடையர்மென்ட் காலத்தில் எந்தக் கடனும் யாரும் தர மாட்டார்கள். அந்த வகையில், வேலைக்குச் சேர்ந்ததும் உங்களின் முதல் முதலீடு பணி ஓய்வுக்காலத்துக்கு உரியதாகத்தான் இருக்க வேண்டும். இளம் வயதில் இந்த முதலீட்டை ஆரம்பிக்கும்போது சிறிய தொகையை தொடர்ந்து முதலீடு செய்து வந்தாலே போதும்.

உதாரணத்துக்கு, ஒருவர் வேலைக்குச் சேர்ந்ததும் அவரின் 25 வயதில் மாதம்தோறும் ரூ.1,500 வீதம் அவரின் 60 வயது வரைக்கும் மொத்தம் 35 ஆண்டுகள் முதலீடு செய்து வருகிறார் என வைத்துக்கொள்வோம். அவர் மொத்தம் ரூ.6.30 லட்சம் முதலீடு செய்திருப்பார். இந்த முதலீட்டை அவர் ஈக்விட்டி ஃபண்டில் மேற்கொண்டு அதற்கு ஆண்டுக்குச் சராசரியாக 12% வருமானம் கிடைத்திருந்தால் 60 வயதில் சுமார் ரூ.97.50 லட்சம் சேர்ந்திருக்கும்.

இப்போது மேலே கேட்கப்பட்ட சர்வே கேள்விகளுக்கான பதிலை உங்களிடம் நீங்களே கேட்டு, நீங்கள் இதில் எந்த வகையின் கீழ் வருகிறீர்கள் என்பதைத் தேர்ந்தெடுங்கள். இதன் மூலம் உங்களுடைய தேர்வும் பெரும்பாலான இந்தியர்களின் சிந்தனையோடு ஒத்துப் போகிறதா என்பதை அறிந்துகொள்ள முடியும். மேலும், சரியான நிதித் திட்டமிடலை மேற்கொண்டு முதலீடு செய்து வரும்பட்சத்தில் நிம்மதியான பணி ஓய்வுக்காலத்தை உறுதி செய்ய முடியும்.